Academic Research News

Peer-Reviewed Journal

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X



# Ethics of Life and *Abirami Anthathi*

**Dr. K. S. Kolappadhas,** Associate Professor of Tamil,
Pioneer Kumaraswamy College, Nagercoil, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000--0003-1600-8034**

Received: 11 April 2025; Revised: 29 April 2025; Accepted: 5 June 2025; Available Online: 30 July 2025.

## Abstract

*Sri Abirami Pattar lived 300 years ago. He was born in a Brahmin family. His parents' names are not known, but he was called Abhirami Pattar along with the name of the Goddess who graces the place. He practised Shakti Pooja and Yoga at his time. Therefore, he always saw the Goddess Abirami in the highest heaven in the form of light and was immersed in bliss. Since Abirami Pattar was full of devotion and was not attached to worldly life in the path of liberation, other people could not understand Pattar. Goddess Abirami (Embrati) appeared as a fruit of wisdom and looked at Abirami Pattar and, with a sigh, said continue the work that you have started and complete it. Then she disappeared. The first thing that drives a person is the ego. If a person wants to say that he does not have an ego and says to others If others don't believe me, ask those around me. They will tell you that I don't have a single bit of ego. Even if one says this with a humble face, the ego is still raised in its head. So, the ultimate desire of every person is to reach God or to attain liberation. It can be said that the life of Abirami Pattar can be seen as the best example of living a benevolent life.*

**Keywords:** Abirami Pattar, *Abirami Anthathi*, Matriarchy, Fate, Blessings.

## References

[1] Ananthan. *Tamil Ilakkiya Varalaru*. Kanmani Pathippagam, Trichy, 2003.
[2] Ilayaperumal, Ira. *Abiramipattar Aruliya Abirami Anthathi Moolamum Uraiyum*. Sakunthalai Nilaiyam, Chennai, 2018.
[3] Bakthavathsala Barathi. *Ilakkiya Manidaviyal.* Adaiyalam, Trichy, 2014.
[4] ---.*Pathinen Keezhkkanakku Noolkal. Moolamum Thelivuraiyum (Muthal Thokuthi)*. Tamizh Nilaiyam, Chennai, 2007.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

Academic Research News

*Peer-Reviewed Journal*

48

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

# அபிராமி அந்தாதியும் வாழ்வியலும்

**முனைவர் கோ. சி. கோலப்பதாஸ்,** தமிழ்த்துறை, இணைப்பேராசிரியர்,
பயோனியர்குமாரசுவாமிக் கல்லூரி, நாகர்கோவில், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000--0003-1600-8034**

**ஆய்வுசுருக்கம்**

*சுமார் 300 ஆண்டுகட்கு முன் தோன்றியவர் ஸ்ரீஅபிராமிபட்டர். அந்தணர் மரபில் தோன்றியவர் இவருக்குப் பெற்றோர் இட்டபெயர் இன்னதெனத் தெரியவில்லை எனினும் அத்திருத்தலத்தில் அருள்பாலிக்கும் அம்பிகையின் திருநாமத்துடன் சேர்த்து அபிராமிபட்டர் என அழைக்கப்பட்டார். சக்திபூஜையும், யோகநெறியும் செவ்வனே பயின்றுவந்தார். அதனால் என்றும் உச்சித்திலகத்தில் அம்பிகையை ஒளிவடிவமாகக் கண்டு பேரின்பத்தில் ஆழ்ந்தவர். பக்தி நிறைந்து முக்தி நெறியில் உலகப்பற்றற்று விளங்கியதால் பட்டரை மற்றவர்களால் புரிந்துக்கொள்ள முடியவில்லை. ஞானப்பழமாய் காட்சியளித்த எம்பிராட்டி பட்டரை நோக்கி, வாய் சோர்ந்து மன்னனிடம் கூறிய சொல்லையும் மெய்யே என நிறுவினோம் தொடங்கிய அந்தாதியைத் தொடர்ந்து முடிப்பாயாக என ஆணையிட்டு மறைந்தருளினாள். மனிதனை துரத்துவதில் முதல் இடம் பிடித்திருப்பது அகம்பாவம் எனக்கு அகம்பாவம் துளியும் கிடையாது நம்பாவிட்டால் என்னுடன் இருப்பவர்களைக் கேட்டுப்பார் துளிக்கூட அகம்பாவம் இல்லை எனக்கு என்பதை அவர்களே சொல்வார்கள் என்று அடக்கத்தைக் குறிக்கும் முகமாகச் சொன்னனாலும் கூட, அதிலும் அகம்பாவம் தலைநீட்டிவிடுகிறது மனிதனை அகம்பாவம் துரத்துகிறது. ஒவ்வொரு மனிதனின் இறுதி ஆசை இறைவனை அடைதல் அல்லது முக்தி அடைதல் ஆகும். மனிதனின் வாழ்வு அபிராமிபட்டரின் அபிராமி அந்தாதியில் அமைந்துள்ளது எனலாம்.*

**குறிப்புச்சொற்கள்:** அபிராமிபட்டர், அபிராமி அந்தாதி, தாய்வழிசமூகம், விதி, புண்ணியம்.

**முன்னுரை**

இளமையில் கல் என்பது முதுமொழி. இளமையில் கற்பது கல்லில் எழுதிய எழுத்தை ஒக்கும். இளமைப் பருவத்தை வீணாக்காது கற்றல் நன்று. வயதான பிறகு தான் பக்தி நூல்கள், வேதாந்த நூல்கள், ஆகமங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் முதலிய சமய நூல்களை படிப்பது என்று வைத்துக் கொள்ள வேண்டாம். முதுமைப் பருவத்தில் கண்பார்வை குறைந்து, அறிவுக் கூர்மை மழுங்கி, ஐம்புலன்களும் தளர்ந்து உடல் சோர்வு கண்ட பிறகு ஆர்வம் இருக்காது. எனவே, இளமைப் பருவமே சமயக்கருத்துக்களை அறிவது அவசியமாகும். பாலில் உறையிட்டுத் தயிராக்குவதைப் போலக் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் படிக்க வேண்டும். தயிரைப் பக்குவமாகக் கடைந்து பிறகு அதிலிருந்து வெண்ணெய் எடுக்கின்றோம். வெண்ணெய் மோரில் மிதக்கின்றது. தயிரிலிருந்து எடுக்கப்பட்ட வெண்ணெய் பின் மோரோடு ஒட்டுவதில்லை. இவ்வுலகில் ஞானமாகிய வெண்ணெய் கைவரப் பெற்றால் உலகப் பற்று நம்மை அணுகாது. அவ்வாறு உலகபற்று நம்மை அணுகாமல் இருக்க பக்தி இலக்கியம் படிப்பது அவசியமாகும்.

**அபிராமி பட்டர்**

சுமார் 300 ஆண்டுகட்கு முன் தோன்றியவர் ஸ்ரீ அபிராமி பட்டர். அந்தணர் மரபில் தோன்றியவர். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் இன்னதெனத் தெரிய வில்லை எனினும் அத்திருத்தலத்தில் அருள்பாலிக்கும் அம்பிகையின் திருநாமத்துடன் சேர்த்து அபிராமி பட்டர் என அழைக்கப்பட்டார்.இப்பெரியார் சக்தி பூஜையும், யோக நெறியும் செவ்வனே பயின்று வந்தார். அதனால் என்றும் உச்சித் திலகத்தில் அம்பிகையை ஒளி வடிவமாகக் கண்டு

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

பேரின்பத்தில் ஆழ்ந்தவர். பக்தி நிறைந்து முக்தி நெறியில் உலகப் பற்றற்று விளங்கியதால் பட்டரை மற்றவர்களால் புரிந்துக் கொள்ள முடியவில்லை.

அக்காலத்தில் தஞ்சையை சரபோஜி மன்னர் ஆண்டு வந்தார். தெய்வ பக்தியும் மதப் பற்றும் மிகுந்தவர். அவர் ஒரு தை அமாவாசை தினத்தன்று காவிரி சங்கமத்திலே நீராடினார். திரும்பிய வழியில் ஸ்ரீ அமுதகடேசுவரையும் ஸ்ரீ அபிராமி அம்மையையும் வழிபட விரும்பித் திருக்கடவூரை அடைந்தார். நித்திய அனுஷ்டானங்களை முடிந்து விட்டுத் திருக்கோயிலுக்குச் சென்றார். அப்போது அபிராமி பட்டர் அம்பிகையின் சந்நிதியில் இவ்வுலக நினைவு ஏதுமின்றித் தியானத்தில் அமர்ந்திருந்தார். அவரது புத்தொளி வீசும் முகமும், தியான நிலையையும் சரபோஜி மன்னரைக் கவர்ந்தது. அருகில் இருந்தோரை நோக்கி, இவர் யார் என்று வினவினார். அரசர் ஒன்றும் கூறாது உட்சென்று அம்பிகையைத் தரிசனம் செய்தார். ஆனால், அரசனின் மனதில் பட்டரின் தோற்றம் மீண்டும் மீண்டும் வந்து கொண்டே இருந்தது. எனவே,திரும்பி வரும்போது பட்டரோடு ஏதேனும் பேச வேண்டும் என்ற பேரவாவில் அவரை நோக்கி, பட்டரே இன்று என்ன திதி என்று கேட்டார்.

கற்பனைக்கெட்டாத பெருவெளியில் முளைத்தெழுந்த முழுமதியாக அம்பிகையைக் கண்டு அக்காட்சியிலே களித்து நின்ற அபிராமி பட்டருடைய செவியில் அரசர் கேட்டது அரை குறையாக விழுந்தது. முழுமதியின் ஒளி வட்டத்திடையே அம்பிகையின் அருள் தோற்றத்தை ஆனந்தமாய்க் கண்டு பரவச முற்றிருந்த நிலையில் வாய் குழறி, இன்று பௌர்ணமி என்று விடையளித்தார். அரசரும் அவருடைய பரிவாரமும் அகன்ற பின்னர் தியானம் கலைந்தெழுந்த அபிராமிபட்டர் நிகழ்ந்ததை அறிந்து பெரிதும் வருந்தினார். பட்டர் தனக்கென்று ஒன்றும் இன்றி யாவற்றையும் அம்பிகைக்கே அர்ப்பணம் செய்து விட்ட வைராக்கியம் உடையவர். ஆதலினால் அந்த அம்பிகையை அப்பழியினின்றும் தம்மை மீட்க வேண்டும் என்று வேண்டினார். அம்பிகையின் சந்நிதியில் ஆழமான ஒரு குழி வெட்டி அதில் பெருநெருப்பு மூட்டி அதன் மேலே ஒரு விட்டத்தினின்றும் நூறு ஆரம் கொண்ட ஓர் உறியைக் கட்டித் தொங்கவிட்டார். பிறகு அதன் மீதேறி அமர்ந்து அம்பிகையே மனதால் நினைந்து, தலையால் வணங்கி சோர்வினால் வந்த மாபெரும் பழியைத் துடைத்துத் தரணி போற்றும் தலைமையைத் தாராளெனின் என் உடலை இவ்வெரிக்கு இட்டு உயிர் துறப்பேன் எனக் கடுஞ்சூள் உரைத்து ‘உதிக்கின்ற’ எனத் தொடங்கும் இந்த அந்தாதியைப் பாடத்தொடங்கினார். ஒவ்வொரு பாடலும் முடிந்த உடனே உரியின் ஒவ்வொரு கயிற்றை அரிந்துக் கொண்டே வந்தார். இந்நிலையில் கதிரவனும் மேலைக் கடலை நண்ணினான். அப்போது 79-வது பாடலாகிய

**விழிக்கே அருளுண்டு அபிராம வல்லிக்கு வேதம் சொன்ன**
**வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு அவ்வழி கிடக்கப்**
**பழிக்கே சுழன்று வெம் பாவங்களே செய்து பாழ்நரகக்**
**குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு என்ன கூட்டினையே (79)**

என்ற பாடல் முடிந்த உடனே ஸ்ரீ அபிராமியம்மை பட்டருக்கு வெளிப்பட்டுத் தோன்றி காட்சி கொடுத்தருளினாள். அத்தோடு தன் தாடங்கம் ஒன்றைத் தனியே எடுத்து வான வீதியில் தவழ விட்டாள். அத்தாடங்கம் வட்ட மதியின் உருவாய்ப் பல கோடி நிலவின் ஒளியாய் நீல வானக் கடலிலே ஊர்ந்து வந்தது.ஆனந்தமயமாய், ஞானப் பழம்பாய்க் காட்சியளித்த எம்பிராட்டி பட்டரை நோக்கி, வாய் சோர்ந்து மன்னனிடம் கூறிய சொல்லையும் மெய்யே என நிறுவினோம் தொடங்கிய அந்தாதியைத் தொடர்ந்து முடிப்பாயாக என ஆணையிட்டு மறைந்தருளினாள்.

**தாய்வழி சமூகம்**

சங்க காலத்தில் தமிழ்ச் சமூகமானது மனித குலத்தின் தொடக்க நிலையான தாய்வழி மரபையும் அதனையடுத்து ஏற்பட்ட தந்தைவழி மரபையும் கொண்டதாகும். சங்க நூல்களில் பதிற்றுப்பத்து தமிழ்ச் சமூகங்களில் காணப்பட்ட மருமக்கள் தாய முறையை விளக்கும். ஒரு சமூகத்தின் அமைப்பானது (social structure) தாய்வழியில் அமைந்துள்ளதா, தந்தை வழியில்

அமைந்துள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதாகும். சங்க காலத்திற்குப் பின்னர் தாய் வழி சமூகங்கள் முற்றிலுமாக அழிந்துவிட்டது என்று கருதமுடியாது. தமிழ் மரபு தொன்மையானது மட்டுமல்ல தொடர்ச்சியான மரபு. அந்த மரபின் தொடர்ச்சியே பெண் தெய்வ வழிபாடு ஆகும். அந்த அடிப்படையில் அபிராமி அந்தாதி ஒரு சிறந்த பக்தி இலக்கிய படைப்பாகும். அரசன் கேட்ட கேள்விக்கு தவறான பதிலை சொல்லிவிட்டோமோ என்று பயந்த அபிராமி பட்டர் அபிராமி தாயை நோக்கி தன் வேண்டுதலை சொல்லும் விதமாக அமைந்ததே அபிராமி அந்தாதி.

**முடியாட்சியும் அபிராபி பட்டரும்**

முடியாட்சி அரசில் அனைத்து வல்லமையும் கொண்டவர் அரசர். இவரே நாட்டின் ஒழுங்கைக் காக்கிறார். ஆனால் பூவுலகம் உள்ளிட்ட ஒட்டுமொத்த பிரபஞ்சத்தின் ஒழுங்கைக் காப்பவர் கடவுள். ஆக,பிரபஞ்சம் முழுமைக்குமான ஒழுங்கைக் காக்கும் இறைவனின் அருள் பெறாமல் எந்த மன்னனும் நீண்ட ஆயுளையோ, போரில் வெற்றியையோ, நாட்டின் நீதி, நிர்வாகம், பொருள், வளம், பஞ்சமின்மை, நோய் நொடியின்மை ஆகியவற்றையோ பெற இயலாது. இந்நிலையில் பிரபஞ்சத்தை இயக்கும் கடவுளரின் ஆற்றலைப் பெறுதல் என்பதே அரசனின் தொடர் விழைவாக இருந்தது.

பிராமணர்களின் வழி இவ்வாற்றலைப் பெற முன்வந்த பின் அரசு சார்ந்த வேள்ளியும் யாகமும் பெருகின. குறிப்பிட்ட கால இடை வெளியில் மீண்டும் யாகமும் வேள்வியும் செய்து இறையாற்றலைத் தன்வயப்படுத்த மன்னர்கள் விரும்பினர். இத்தகு ஆற்றலைப் புதுப்பிக்கும் செயலானது ஒரு தொடர்ச்சியான விழைவாக இருந்ததால் வேத காலம் தொட்டு முடியாட்சி என்பது யாக, வேள்வி மையமிமட்ட சடங்கியல் சார்ந்ததாக உருவானது (kingship is a sacrificial organization) 'முடியாட்சி என்பதே யாகம், வேள்வி சார்ந்து நடத்தப்பட்டது' என்றாகிவிட்டது. அடுத்தடுத்த வரலாற்றுக் கட்டங்களில் சிறிது சிறிதாக இத்தன்மை மேலும் வலிமை பெற்றுவிட்டது.

நாட்டின் அனைத்து வல்லமையையும் (power) கொண்டவர் மன்னர். இவர் தம் வல்லமையால் எல்லோரையும் விட உயர்ந்து நிற்கிறார். அந்த அதிகாரம் எல்லாவற்றிர்கும் காரணமாக அமைகிறது. இந்த நிலையில் தான் அரசனின் கேள்விக்கு நாம் தவறாக பதில் உரைத்துவிட்டேன் என்று கருதிய அபிராமி பட்டர் தன் உயிரை மாய்த்துக்கொள்ள விரும்பினார். ஆனால் தாய் உள்ளம் கொண்ட அம்பிகை அபிராமி பட்டரை காத்தருளினார் என்பதே வாழ்வியலின் திருப்புமுனையாகும்.

**அபிராமிபட்டரும் வாழ்வியலும்**

அம்பிகையை நேரில் தரிசித்த அபிராமிபட்டர். இவர் பெயரைச் சொன்னதும் அபிராமி அந்தாதிதான் நினைவுக்கு வரும் அபிராமி அந்தாதி உயர்ந்ததுதான் சந்தேகம் இல்லை. ஆனால், அதில் உள்ள பல பாடல்களுக்கு விளக்க உரை இருந்தால்தான் பொருள் புரியும். ஆனால், படிக்கும்போதே எளிமையாகப் பொருள் புரியும் வண்ணம். நேருக்கு நேராக அம்பிகையிடம் முறையிடும் விதமாக அமைந்துள்ள பலப் பாடல்களையும் அபிராமி பட்டர் எழுதியுள்ளார். அபிராமியம்மைப் பதிகங்கள் என்ற பெயரில் அமைந்துள்ள அப்பாடல்கள் மக்கள் மத்தியில் ஏனோ பரவவே இல்லை. அந்தப் பாடல்களில் இருந்து ஒரு பாடல்,

**மிகையுந் துரத்தவெம் பிணியுந் துரத்த**
**வெகுளி யானதுந் துரத்த**
**மிடியுந் துரத்தநரை திரையுந் துரத்தமிகு**
**வேதனைகளுந் துரத்த**
**பகைந்தூத்தவஞ் சனையந் தூத்த**
**பசியென் பதுந்துரத்த**
**பாவந்துரத்த பதிமோகந்தூக்க**
**பலகாரியமுந் துரத்த**

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

**நகையுந்துரத்த ஊழ் வினையுந் துரத்த**
**நாளும் துரத்த வெகுவாய்**
**நாவறண் டோடிக்கால் தளர்ந்திடும் என்னை**
**நமனும் துரத்து வானோ?**
**ஆகில உல கங்கட்டும் ஆதார தெய்வமே**
**ஆதி கடவூரின் வாழ்வே**
**அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி**
**அருள் வாமி! அபிராமியே! (அபிராமி அம்மை பதிகம், 11)**

தன்னந்தனி ஆளாக ஒருவன் ஓடிக்கொண்டிருக்கிறான். ஏராளமானோர் அவனைத் துரத்ததிக்கொண்டு ஓடுகிறார்கள் யார் அந்த மனிதன் துரத்துபவர்கள் யார் ஏன் துரத்துகிறார்கள் இதற்கு மிக அருமையான விளக்கம் தருகிறார் அபிராமிபட்டர். ஓடும் மனிதன் நாம் தான் நம்மைத் துரத்துவோர் குறித்து பெரிய பட்டியலே போடுகிறார் மனிதனை துரத்துவதில் முதல் இடம் பிடித்திருப்பது அகம்பாவம் எனக்கு அகம்பாவம் துளியும் கிடையாது நம்பாவிட்டால் என்னுடன் இருப்பவர்களைக் கேட்டுப்பார் துளிக்கூட அகம்பாவம் இல்லை எனக்கு என்பதை அவர்களே சொல்வார்கள் என்று அடக்கத்தைக் குறிக்கும் முகமாகச் சொன்னாலும் கூட, அதிலும் அகம்பாவம் தலை நீட்டிவிடுகிறது மனிதனை அகம்பாவம் துரத்துகிறது.

மிகை என்பதற்கு தீய செயல்கள் தவறுகள் தண்டனை என்னும் அர்த்தங்களும் உண்டு. அதன்படி பார்த்தால். தீய செயல்கள் துரத்த தவறுகள் துரத்த தண்டனை துரத்த தீய செயல்களும் அதனால் விளைந்த தவறுகளும் அவற்றுக்கு உண்டான தண்டனைகளும் நம்மைத் துரத்துகின்றன. இதிலிருந்து தப்பிப் பிழைத்தால் வெம்பிணியும் துரத்துகிறது என்கிறார். நோய்கள் துரத்துகின்றன. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காலம் உண்டு. ஆனால், இந்த நோய்களுக்கு மட்டும் காலம் என்பதே கிடையாது கருவில் இருக்கும் குழந்தை முதல், கடைசி காலத்தை நெருங்கிக்கொண்டிருக்கும் முதியோர்கள் வரை எல்லோரையும் நோய் தாக்குகிறது. நோய்க்கு ஆண், பெண் படித்தவன், படிக்காதவன், ஏழை,பணக்காரன் என்ற பேதமெல்லாம் கிடையாது எல்லோரையும் பாதிக்கும்.

தலைவலி போன்ற சாதாரண பிணிகள் மட்டுமல்ல தற்கால சிக்குன் குன்யா, கொரானா, பலவிதமான புற்றுநோய்கள் மருத்துவமே கிடையாது என்று சொல்லக்கூடிய எய்ட்ஸ் வரையிலும் அனைத்து நோய்களும் மனித குலத்தைத் துரத்துகின்றன. இந்தக் கொடுமையைக் குறிப்பதற்காகவே வெம்பிணியும் துரத்த என்றார் அபிராமிபட்டர். அடுத்தது கோபம்தான் சாதாரணமாகவே கோபம் பெருவியாதி மேலும் மனிதகுலத்துக்கு வியாதி வந்துவிட்டால் கேட்கவே வேண்டாம். யாரைப் பார்த்தாலும் எரிந்து விழுவோம் வியாதியும் கோபமும் நம்மைத் துரத்துவது மட்டுமல்ல நம்முடன் இருப்பவர்களையும் நம்மிடமிருந்து துரத்திவிடும் அதையே, வெகுளியும் துரத்த எனக் குறிப்பிடுகிறார். மிடியும்துரத்த அதாவது வறுமையும் நம்மைத் துரத்துகிறது. அது மட்டுமல்ல நாம் வறுமையில் இருக்கிறோம் என்றால் நம்மை நெருங்கவிடாமல் நம் உறவினர்கள் துரத்துவார்கள் எங்கே உதவி கேட்டு வந்துவிடுவானோ என்ற எண்ணமே அதற்குக் காரணம் இவ்வளவு நேரம் பார்த்த துரத்தல்களில் இருந்து தப்பிப் பிழைத்தாலும் நரை திரை மூப்புகளில் இருந்து தப்பிப் பிழைக்க முடியாது. நரை திரையும் துரத்த உடம்பில் தோல் சுருங்கி தலையும் வெளுத்துப் போய் நம்மைத் துரத்துகிறது.

வேதனைகளை நோக்கித் துரத்துகிறது தலை நரைத்துவிட்டது கறுப்புச் சாயம் பூசிவிடலாம் ஆனால் முதுமை வந்துவிட்டதே ஒருவேளை நம்மை வீட்டை விட்டு வெளியேற்றி முதியோர் இல்லத்தில் சேர்த்துவிடுவார்களோ நம் குழந்தைகள் மரியாதை கொடுக்காமல் நம்மை அவமானப்படுத்தி விடுவார்களோ என்ற வேதனை புலம்பல் வெளிப்படும். அக்கம் பக்கமெல்லாம்போய்ப் புலம்பச் சொல்லும் அதையே அடுத்ததாக மிகு வேதனைகளும் துரத்த

Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

என்கிறார் அபிராமிபட்டர். பகை என்று வந்த பின்னர் கேட்கவே வேண்டாம். வஞ்சனை வெளிப்படும். அடுத்துக் கெடுப்பது கூடவே இருந்து குழி பறிப்பது யாருக்கும் தெரியாமல் வேரில் வெந்நீரை ஊற்றுவது என வஞ்சனை பட்டியல் நீண்டுகொண்டே போகும் வஞ்சனை வெளிப்படாத வரையிலும் அது நம்மைத் துரத்தித் துரத்திச் செயல்படச் செய்துகொண்டே இருக்கும். வஞ்சனை வெளிப்பட்டுவிட்டாலோ அதன் விளைவுகள் நம்மைத் துரத்தும் முக்கியமான ஒன்று எல்லோரையும் துரத்தும் எப்போதும் துரத்தும் பசி பசி தீர அறுசுவை உணவுதான் வேண்டும் என்பது இல்லை. அப்போதைக்கு ஏதாவது கிடைத்தால் போதும் ஆனால் நம்மைத் துரத்தும் பசியை துரத்துவதற்காக செய்யும் செயல்களையே பாடல் பகுதிகள் சொல்கின்றன.

**வருணனை**

அபிராமிஅந்தாதி கடவுளை பற்றி பாடபெற்றது என்றாலும் வருணனைகள் நிறைந்து காணப்பட்டன. என்பதற்கு இப்பாடல் சான்றாகும்.

**உதிக்கின்ற செங்கதிர், உச்சித் திலகம், உணர்வுடையோர்**
**மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம் போது, மலர்க்கமலை**
**துதிக்கின்ற மின்கொடி, மென்கடிக் குங்கும தோயம் என்ன**
**விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே. (1)**

உதயமாகின்ற செங்கதிரவன் மேல் நெற்றியில் அணியும் சிந்துரத்திலகம் ஞானம் உடையவர்கள் நன்கு மதிக்கின்ற மாணிக்கம் மாதுளமலர் தாமரை மலரில் எழுந்தருளிய திருமகள் துதி செய்கின்ற மின்னற்கொடி, மெல்லிய வாசனையையுடைய குங்குமக் குழம்பு ஆகிய பொருள்களைப் போன்றவள் என்று கூறுகின்ற திருமேனியையுடைய அபிராமியம்மையே என்னுடைய மேன்மையான துணை ஆவாள்.

**அம்பிகையின் வேறுபெயர்கள்**

சுந்தரி, வந்தரி, சிந்துர வண்ணத்தினாள், அந்தரி, நீலி, கன்னிகைபயிரவி, பஞ்சமி, பாசாங்குசை, பஞ்ச பாணி, உயர்சண்டி காளிகலாவயிரவி மண்டலி மாலினிசூலி வராகி என்ற பல்வேறு நாமங்கள் கொண்டவர் அம்பிகை ஆவாள்.

**சுந்தரி எந்தை துணையின் பாசத் தொடரையெல்லாம்**
**வந்தரி, சிந்துர வண்ணத்தினாள் மகிடன் தலைமேல்**
**அந்தரி, நீலி, அழியாத கன்னிகை ஆரணத்தோன்**
**சுந்தரி கைத்தலத் தாள் மலர்த்தாள்என் கருத்தனவே. (8)**

சுந்தரி எந்தையாகிய சிவபெருமானுக்குரிய தேவி என்னுடைய சாபமாகிய தளைகளை எல்லாம் அழிக்கும் சிந்தூரநிறம் பொருந்தியவள் மகிஷாசுரனது சிரத்தின் மேல் நிற்கும் சுந்திரி, நீல நிறத்தை உடையவள் என்றும் அழிவில்லாத கன்னிகை பிரமதேவனது கபாலத்தைத் தாங்குகின்ற திருக்கரத்தை உடையவள். இத்தகைய அபிராமியின் தாமரை மலரைப் போன்ற திருத்தாள்கள் என் உள்ளத்துள்ளே என்றும் எழுந்தருளியிருக்கிறாள். அவள் வஞசகர் உயிரை பலியாக கொள்ளும் பெருமையுடையவள் கலைகளுக்கு தேவி வட்டமான மேகலையை உடையவள் குற்றம் தீர்ந்த வேதங்கயின் நாயகியாகவும் விளங்குபவள்.

**மோட்ச சாதனம் பெறுதல்**

ஒவ்வொரு மனிதனின் இறுதி ஆசை இறைவனை அடைதல் அல்லது முக்தி அடைதல் ஆகும். ஒரு சாதாரண மனிதனின் தேடலுக்கும் ஒரு மானின் தேடலுக்கும் இருக்கின்ற சுதந்திரம் முற்றிலும் வேறுப்பட்டது. மகான் நாடுகின்ற சுதந்திரம் அவரை எல்லையற்ற இன்பத்திற்கு விவரிக்க முடியாத ஆனந்தத்திற்கு அழைத்துச்செல்கிறது. சாதாரண மனிதன் தன் உலக ஆசைகளினால் ஆன்மாவை மேலும் மேலும் பல்வேறு சங்கிலிகளால் கட்டி சிறையில் அடைத்துவிடுகிறான். அந்த உலக சங்கிலிகளிலிருந்து விடுபட்டு மோட்சத்தை அடைய அதாவது முக்தி என்னும் ஆனந்தத்தை அளிப்பாயாக என வேண்டுகிறார்.

**நின்றும் இருந்தும் கிடந்தும்நடந்தும் நினைப்பது உன்னை**

**என்றும் வணங்குவது உன்மலர்த்தாள் எழு தாமரையின்**
**ஒன்றும் அரும்பொருளே, அருளேஉமையே இமயத்து**
**அன்றும் பிறந்தவளே, அழியா முத்தி ஆனந்தமே (10)**

எழுதாமல் மேட்கப்படுகின்ற வேதத்தின் அரிய பொருளே. சிவபிரானது திருவருள் வடிவே, உமாதேவியே அன்று இமாசலத்தில் அவதரித்தாய் அழியாத முத்தியின்பமாக உள்ளாய் அடியேன் நின்றபடியும் தியானம் செய்வது உன்னையே என்றைக்கும் வழிபடுவது நின்றன் திருவடித்தாமரையே.

***தீராத நோய் தீர்ப்பவள்***

வாழ்வு சிலநேரம் இன்பமயமானதாகவும் சில நேரம் துன்பமயமானதாகவும் இருக்கின்றது இதில் எந்த நிலை உருவாகும்போதும் மேலானதெரு அன்பை இறைவன் தருவான் என்ற நம்பிக்கையில் வாழ்வு நகர்கிறது. ஆனால் அவன் அருளின்றி ஒரு நொடிகூட உயிர்வாழமுடியாது. இதற்கு இடையில் பல விதமான நோய்கள் உடலை வருத்துகின்றன. பிறவிப்பிணியை நீக்க வேண்டும். நாம் உடல் நோயை நோய் என்கிறோம் உடல் நோய்க்கு மருந்து உண்டு பிறவி நோய்க்கு மருந்தில்லை. பிறவி நோயை நீக்கும் மருந்து இறைவன் கையில் தான் உள்ளது. உண்மையில் நோய் என்பது பிறவி நோயாகும். பிறவி நோயை அழிக்க அபிராமி அம்மையை வேண்டுகிறார்.

**மணியே, மணியின் ஒளியே,ஒளிரும் மணிபுனைந்த**
**அணியே அணியும் அணிக்கு அழகேஅணு காதவர்க்குப்**
**பிணியே,பிணிக்கு மருந்தேஅமரர் பெருவிருந்தே**
**பணியேன் ஒருவரை நின்பத்மபாதம் பணிந்தபின்னே. (24)**

மாணிக்கம் போன்றறோய் அம்மாணிக்க மணியின் கண் உள்ள பரகாசம் போன்றோய் விளங்குகின்ற மாணிக்கங்களால் செய்யப் பெற்ற ஆபரணம் போன்றோய் நின்திருமேனியில் அணியப்படுகின்ற மணிகளுக்கு அழகாயிருப்பாய் நின்னை அணுகாமல் வீணே பொழுதுப் போக்குபவர்களுக்கு நோய் போன்றோய் நின்னை அணுகிய அடியவர்களது பிறவிநோய்க்கு மருந்து போன்றோய் தேவர்களுக்குப் பெரிய விருந்து போன்றோய், அடியேன் நின்னுடைய தாமரை போன்ற திருவடிகளை வணங்கிய பின்னர் வேறு ஒருவரைப் பணியேன். இனிமேல் எனக்கு எந்த பிணியும் வரக்கூடாது என்கிறார்.

***சகல சௌபாக்கியங்களும் உண்டாக***

ஒரு மனிதனின் அத்தியாவசிய தேவை தனம் அதாவது பணம் அல்லது செல்வமாகும் அந்த செல்வத்தை அளிப்பாயாக மேலும் ஒருவனை அறிவு தளத்தில் மேம்படுத்தி ஞானத்தை அழிக்க கூடியக் கல்வியை அளிப்பாயாக மனிதனை தளர்வு அடைய செய்யக் கூடியது மனமாகும். வாழ்க்கை என்பது நிலையற்றது அது கலைகின்ற கனவு ஆகும். அழகும் வாலிபமும் வாடிவிடும் அம்மையே நீயே என் தாய் நீயே என் தந்தை நீயே என் கணவன் நீயேஎன் அன்பு நீயேஎன் பிரபு நீயே என் கடவுள் எல்லாம் நீயே எனக்கு எல்லாமாகி இருக்கின்றாய் மனஒருமைப்பாட்டை ஒவ்வொரு நேரமும் என் மனதிற்கும் என் உடலுக்கும் கொடுப்பாயாக மனம் போதிய அளவு அடக்கப்படாமல் இருப்பதால் இடையூறுகள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. ஆன்மாவை துயரங்களில் பங்கு கொள்ளாமல் பிடித்து வைத்துக்கொள்வது பெருமை வாய்ந்தது. அதற்கு அபிராமி அன்னையே அருள்புரிவாயாக.

**தனம் தரும்,கலவிதரும்ஒருநாளும் தளர்வு அறியா**
**மனம்தரும், தெயவ வடிவும் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா**
**இனம்தரும் நல்லன எல்லாம்தரும்அன்பர் என்பதர்க்கே**
**கனம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே. (69)**

மேகத்தைப் போன்று, பூவை அணிந்த கூந்தலையுடைய அபிராமியின் கடைக்கண் அத்தேவியின் அன்பர்களுக்கு எல்லா வகை ஐசுவரியங்களையும் தரும், கல்வியைக் கொடுக்கும். ஒரு நாளேனும் தளர்ச்சியை அறியாத உறுதியான மனத்தை அளிக்கும். தெய்வீக

அழகை வழங்கும், மனத்தில் வஞ்சம் இல்லாத உறவினரையும் நண்பரையும், ஈயும் இன்னும் எவை எவை நல்ல பொருள்களோ அவை எல்லவற்றையும் வழங்குவாயாக.

**நிலம், வீடு போன்ற செல்வங்கள் பெருக**

ஒரு மனிதனின் அடிப்படைத் தேவை நிலம், வீடு, செல்வம் இதனை அடைய அம்பிகையை வழிப்படவேண்டும். சமுதாயத்தில் எவரோடும் சேர்ந்து வாழவேண்டும். அதற்கு உலகாய தேவைகள் அவசியமாகிறது. அதனை சிலர் இறைவனிடம் வேண்டிப்பெறுகின்றனர். மனைவி, கணவன், குழந்தைகள், வேலைக்காரர்கள், வீடு, செல்வம் இவை போன்றவை. ஆனால் இந்த உலகம் உணக்கானது அல்ல மனிதப்பிறவி வெடுத்த நாம் இந்த உலகில் வாழ்ந்தே ஆகவேண்டும் என்கிற தேவை இருக்கிறது. இந்த கருத்தின் அடிப்படையில் செயல்படுகிறோம். அதுவே நமக்கு கிடைக்கிறது.

**பாரும், புனலும், கனலும்,வெங்காலும், படர்விசும்பும்**
**ஊரும் முருகு சுவைஒளிஊறுஒலி ஒன்று படச்**
**சேரும் தலைவி,சிவாகாமசுந்தரி, சீறடிக்கே**
**சாரும் தவம்உடை யார்படையாத தனம்இல்லையே. (68)**

பூமியும், நீரும்,நெருப்பும், வாயுவும், ஆகாசமும், ஆகிய ஐந்து பூதங்களிலும் முறையே பரவிய இவ்வுலகில் மணமும் சுவையும், ஒளியும் பசிசமும் சத்தமுமாகிய தன்மந்திரைகள் இசையும் படி அவற்றினிடத்தே பரந்து நிற்கும் பரமேசுவரியாகிய சிவகாம சுந்தரியின் சிறிய திருவடிக் கண்ணே சார்ந்து நிற்கும் தவத்தை உடைய அடியார்கள் தமக்கே உரியனவாகப் பெறாத செல்வம் ஒன்றும் இல்லை. ஆகவே எனக்கு எல்லாச் செல்வங்களையும் அருள்வாயாக.

**யோகசித்தி கிடைக்கும்**

இறைவனை அடைய யோகசித்தி பெறவேண்டும் உங்கள் இதயத்தில் ஒரு வெளி இருப்பதை உணருங்கள் அதில் சுடர் ஒன்று ஒளிவிடுகிறது. அதுதான் உங்கள் ஆன்மா. அதனுள் உங்கள் கடவுள் பேரொளியாக இருப்பதாக எண்ணுங்கள் உங்கள் இதயத்தில் தியானம் செய்யுங்கள். பிரம்மசரியம், அகிம்சை, எதிரிகளிடம் இரக்கம் ,உண்மை பேசுதல் கள்ளுண்ணாமை, பிறர்மனை நயவாமை, பிறருக்கு உபகாரம் செய்தல்,களவு செய்யாமை, கொலை செய்யாமை, புலால் உண்ணாமை, இறை நம்பிக்கை இவையெல்லாம் மனித மாண்புகள். இவற்றில் நிறை நிலை அடைய வேண்டும். இதற்கு முயற்சி செய்ய வேண்டும் தன்னை முழுமையாக இறைவனுக்கு அற்பணம் செய்ய வேண்டும். எந்தஒரு ஆசையுடனும் இறைவனை சரணடைந்தால் அவனருள் கிடைப்பது கடினம் எனவே ஞானம், பத்தி, தியாகம், வைராகியம் இவற்றால் வழிப்பட்டால் யோகசித்திக் கிடைக்கும் என்கிறார்.

**சிறக்கும் கமலத் திருவே! நின்சேவடி சென்னிவைக்கத்**
**துறக்கம் தரும்நின் துணைவரும்நீயும், துரியம்அற்ற**
**உறக்கம் தரவந்து உடம்பொடுஉயிர்உறவு அற்றுஅறிவு**
**மறக்கும் பொழுதுஎன் முன்னேவரல்வேண்டும் வருந்தியுமே (89)**

சிறப்புற்ற தாமரையில் வீற்றிருக்கும் தேவி நின் சிவந்த திருவடியைத் தன் செந்நியிலே ஒருவன் அவனுக்கு மோட்ச பதவியைத் தரும் நின்னுடைய பதியாகிய பரமேசுவரரும் நீயும் உடம்போடு உயிருக்கு உள்ள நட்பு அற்ற அறிவு அழிந்து எல்லாம் மறக்கின்ற மரண காலத்தில் துரியம் கடந்த நிலையில் வரும் சிவானந்த அனுபவமாகிய துக்கத்தைத் தரும் பொருட்டு எழுந்தருளி வந்து அங்ஙனம் வருதல் வருத்தம் தருவதாயினும் அவ்வருத்தத்தை ஏற்று அடியேனுக்கு முன்னே வந்து காட்சி கொடுத்தருளுதல் வேண்டும் எனக் கேட்கிறார்.

**பிறவிப் பிணி**

மானிடபிறவி என்பது ஒரு பிணியாகும். இதனை வெல்ல இறைவனை அடைவது அவசியமாகும். மானிடபிறவியை வென்றால்தான் முத்தியை அடையமுடியும் ஒவ்வொரு மனிதனின் வாழ்வின் இறுதிநிலை முக்தியை நோக்கியதாக அடையவேண்டும் அதற்கு பிறவாமை வேண்டும்.

**பிறவிப்பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார் ( குறள் 10)**

இதனை அனைத்து ஆன்மீக பெரியோர்களும் பாடியுள்ளனர். அதேபோல் அபிராமி பட்டரும் பல பாடல்களை பாடியுள்ளார்.

**கொடியே, இளஞ்சிக் கொம்பே, எனக்குவம் பேபழுத்த**
**படியே மறையின் பரிமள மே, பனி மால் இமயப்**
**பிடியே, பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே!**
**அடியேன் இறந்துஇங்கு இனிப் பிறவாமல் வந்து ஆண்டு கொள்ளே. (22)**

கொடி போன்றோய், இளைய வஞ்சிப்பூங் கொம்பே எனக்குக் காலமல்லாத காலத்திலே பழுத்த திருவுருவே, வேதமாகி மலரின் மனம் போன்றோய், குளிர்ச்சியையுடைய பெரிய இமாசலத்தில் விளையாடும் பெண்யானையே, பிரமன் முதலிய தேவர்களைப் பெற்ற தாயே, அடியேன் இவ்வுலகத்தின் இறந்த பின்னர் மீண்டும் பிறவாமல் இருக்கும்படி அடியேன்பால் எழுந்தருளி வந்து அடியேனை ஆண்டு கொண்டருள் செய்வாயாக.

**உமையும் உமையொரு, பாகனும் ஏக உருவில்வந்து இங்கு**
**எமையும் தமக்கு அன்பு செய்யவைத் தார் இனி எண்ணுதற்குச்**
**சமயங்களும் இல்லை,ஈன்றெடுப் பாள் ஒரு தாயும் இல்லை**
**அமையும் அமையுறு தோளியர் மேல்வைத்த ஆசையுமே. (31)**

உமாதேவியும் அத்தேவியை ஒரு பாகத்தில் உடைய சிவபிரானும் சேர்ந்து ஒருருவாக எழுந்தருளி வந்து பரிபக்குவமற்ற என் போன்றோரையும் தம் திருவடிக்கு அன்பு செய்யும்படி நன்னிலையில் வைத்திருளினர். ஆதலின் இனிமேல் கடைப்பிடிப்போமென்று எண்ணி நாம் ஆராய்தற்குரிய சமயங்கள் வேறு இல்லை எமக்குப் பிறவிப் பிணி நீங்கியதாதலின் இனி எம்மைப் பெற்று எடுப்பதற்குரியளாகிய தாயும் இல்லை! மூங்கிலைப் போன்ற தோளையுடைய மகளிர்பால் வைத்த மோகம் போதும்.

**என்குறை தீரநின்று ஏத்துகின் றேன் இனி யான்பிறக்கின்**
**நின்குறையே அன்றி யார்குறை காண்? இரு நீள்விசும்பின்**
**மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்!**
**தன்குறை தீரஎங் கோன்சடை மேல்வைத்த தாமரையே. (72)**

உயர்ந்த வானத்தின் கண் மின்னலுக்கு குற்றத்தைக் கற்பித்து அதனினும் நுணுகிய திருவிடையையும் மென்மையாகிய இயல்பையும் உடையாய். ஏம்பிரானாகிய சிவபெருமான் நின் ஊடல் கண் தன் குறையை நீக்கும் அவ்வூடலைத் தீர்க்கும் பொருட்டு நின்னை வணங்கித் தன் சடையின் மேல் வைத்த நின்றன் திருவடி தாமரைகளையே என் குறைகள் நீங்கும்படி நின்று துதிக்கின்றேன். இனிமேல்யான் பிறவியை அடைந்தால் நின்குற்றமே, அல்லாமல் வேறு யார் குற்றம்?.

**அணிமாதி சித்திகளைப் பெற வேண்டுதல்**

**சித்தியும், சித்தி தரும்தெய்வம் ஆகித் திகழும்பரா**
**சுத்தியும், சக்தி தழைக்கும் சிவமும் தவம்முயல்வார்**
**முத்தியும், முத்திக்கு வித்தும், வித் தாகி முளைத் தெழுந்த**
**புத்தியும், புத்தியினுள்ளே புரக்கும் புரத்தை அன்றே. (29)**

அட்டமாசித்திகளும் அச்சித்திகளைத் தரும் தெய்வமாகி விளங்குகின்ற பராசக்தியும், சக்தியைத் தம்மிடத்தே தழைக்கச் செய்த பரமசிவமும் தவம் புரிவார் பெறும் மோட்ச ஆனந்தமும், அந்த முக்தியடைய பெறுவதற்கு அடியிரும் மூலமும், மூலமாகித் தோன்றி எழுந்த ஞானம் ஆகிய எல்லாமாக இருப்பவள், அறிவினுக்குள்ளே நின்று பாதுகாக்கும் திரிபுரசுந்தரியே எனக்கு சித்திகளை தருவாயாக.

**அம்பிகையே என்னைக் காப்பாயாக**

**இழைக்கும் வினைவழியே அடும் காலன், எனை நடுங்க**

**அமைக்கும் பொழுது, வந்து அஞ்சல்என் பாய், அத்தர் சித்தமெல்லாம்**
**குழைக்கும் களபக குவிமுலை யாமளைக் கோமளமே!**
**உழைக்கும்பொழுது, உன்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே. (33)**

இறைவரது திருவுள்ளம் முழுதும் உருகும்படி சியாமளாவாகிய மெல்லியலே, அடியேன் செய்யும் பாவத்தின் விளைவாக அது பற்றி என்னை வந்து கொல்லப் புகும் எமன் அடியேன் நடுங்குபடி என்னை அழைக்கும் சமயத்தில் வருந்தும் பொழுது நின்பால் ஓடிவந்து நின்னையே 'அன்னையே சரணம்' என்ரு புகலடைவேன் அக்காலத்தில் என்பால் எழுந்தருளி,'நீ அஞ்சற்க' என்று கூறி என்னைப் பாதுகாத்தருள வேண்டும்.

**பூர்வ புண்ணியம் பலன்**

**நாலடியாரில் பழவினை என்று ஒரு அதிகாரமே உள்ளது.**
**பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று**
**வல்லதாம் தாய்நாடிக் கோடலைத் தொல்லைப்**
**பழவினையும் அன்ன தகைத்தேதற் செய்த**
**கிழவனை நாடிக் கொளற்கு (நாலடியார்-101)**

பல பசுக்களின் கூட்டத்தில் கொண்டு போய்விட்டாலும் இளைய பசுங்கன்று தன் தாயைத் தேடி அடைதலில் வல்லதாகும். அதுபோல முற்பிறப்பில் செய்த பழ வினையும் அவ்வினை செய்தவனைத்தேடி அடைதலில் வல்லதாகும்.

பூர்வ புண்ணியம் என்பது நாம் முற்பிறவியில் செய்திருக்கும் நன்மை தீமையைப் பொறுத்தே அமைகிறது. பூர்வ புண்ணியம் வலிமை பெற்றிருந்தால் அவருக்கு எல்லா சக்திகளும் எளிதாக கைகூடும். அதற்காக உளைக்காமல் இரு என்று அர்த்தமல்ல. நிறைய புண்ணிய காரியங்கள் செய்வது, மிகவும் நேர்மையாக வாழ்க்கை நடத்துதல், இறைவனிடம் நம்பிக்கையுடன் இருத்தல் போன்றவை செய்தால் பூர்வ புண்ணியம் நன்றாக இருக்கும் என்பர். ஆகவே எப்போதும் நல்ல விசயங்களையே செய்வோம். அடுத்த பிறவிக்காக அல்ல நாடும் நாமும் நலமாக வாழ நல்ல செயல்களை மட்டுமே செய்வோம்.

ஜனனீ ஜென்ம சௌக்கியானாம் வர்த்தினி குலசம்பிரதாம் பதவீ பூர்வ புண்ணியானாம் லிக்கியதே ஜென்மபத்திகா என்கிறது சாஸ்திரம்.

**வாணுதற் கன்னியை, விண்ணவர் யாவரும் வந்து இறைஞ்சிப்**
**பேணதற்கு எண்ணிய எம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்சில்**
**காணுதற் கண்ணியள் அல்லாத கன்னியைக் காணும் அன்பு**
**பூணுதற்கு எண்ணிய எண்ணம் அன்றோ முன்செய் புண்ணியமே. (40)**

ஒளிபொருந்திய நெற்றியிலே திருவழி படைத்தவளை தேவர்கடிஎல்லோரும் வந்து வழிபடத் தூண்டும் எம் தலைவியை அறியாமையுடைய நெஞ்சினாற் காண்பதற்குரிய கன்னியைத் தரிசித்துப் பேறுபெறும் அன்பை மேற்கொள்ளுவதற்கு எண்ணிய எண்ணன்றோ முற்பிறவிகளிலே செய்த புண்ணியத்தின் பயனாவது ஆகும்.

**விதியைவெல்லுதல்**

விதியைவெல்லுவது அரிதாகும் ஆனால் அம்பிகையை வழிப்பட்டால் விதியையும் வெல்ல முடியும் என்பதனை இப்பாடல் மூலம் எடுத்துரைக்கிறார்.

**தங்குவர் கற்பகத் தாருவின் நீழலில் தாயர் இன்றி**
**மங்குவர், மண்ணில் வழுவாப் பிறவியை, மால்வரையும்**
**பொங்குஉவர் ஆழியும்,ஈரேழ் புவனமும், பூத்தஉந்திக்**
**கொங்குஇவர் பூங்குழ லாள் திருமேனி குறித்தவரே. (75)**

எட்டுத் திசைகளிலுள்ள மலைகளையும் உப்புத் தன்மையையுடைய ஏழு கடல்களையும் பதினான்கு புவனங்களையும் பெற்றெடுத்த திருவயிற்றையும் மணமிக்க மலரை அணிந்த கூந்தலையும் உடைய தேவியின் திருவுருவத்தைத் தியானம் செய்யும் அடியார் இந்திர பதவி

Academic Research News
Peer-Reviewed Journal

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

பெற்றுக் கற்பக விருட்சத்தின்ட நிழலில் வீற்றிருப்பார், பின்பு பூமியில் பிறந்திருந்த இடையறவின்றி வரும் பிறவியைத் தம்மைப் பெறும் தாயார் இல்லாமையாலே மங்கச் செய்வர்.

**முடிவுரை**

மனிதப்பிறவி துன்பமயமானது இதை வெல்லுவது கடினமாகும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவிதமான துன்பத்தினை மனிதர்கள் அனுபவிக்கின்றனர். மனிதனுக்கு ஏற்ப சூழல் காரணமாக அவரவருக்கு இன்பமும், துன்பமும் மாறிமாறி வருகின்றது. இதை வெல்ல இறைவன் ஒருவராலேயே முடியும் என்பதனை எடுத்துரைக்கும் விதமாக அபிராமி பட்டரின் வாழ்வும் அபிராமி அந்தாதியும் அமைந்துள்ளது எனலாம்.

**குறிப்புகள்**

[1] ஆனந்தன். *தமிழ் இலக்கிய வரலாறு*. கண்மணி பதிப்பகம், திருச்சி, 2003.
[2] இளையபெருமாள், இரா. *அபிராமிபட்டர் அருளிய அபிராமி அந்தாதி மூலமும் உரையும்*. சகுந்தலை நிலையம், சென்னை, 2018.
[3] பக்தவத்சல பாரதி. *இலக்கிய மானிடவியல்*. அடையாளம், திருச்சி, 2014.
[4] ---. *பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் - மூலமும் தெளிவுரையும் (முதல் தொகுதி)*. தமிழ் நிலையம், சென்னை, 2007.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.**
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.